## 11th History Lesson 8 Questions in Tamil

## 8] பாமினி விஜயநகர அரசுகள்

1. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி சுல்தானியம் தெற்கே விரிவாக்கத்திற்குத் தயாரான போது தக்காண தென்னிந்தியா எத்தனை அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன?

A) 2

B) 3

C) 4

D) 5

2. தக்காண தென்னிந்திய அரசுகள் __________ ஆண்டுகளில் நடைபெற்ற மாலிக்காபூரின் படையெடுப்புகளினால் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்கடிக்கப்பட்டன.

A) 1302, 1309

B) 1304, 1312

C) 1304, 1310

D) 1306, 1314

3. தன் அரசை சிறப்பாக ஆட்சி புரிவதற்கென தலைநகரை தேவகிரிக்கு மாற்றியவர்

A) பால்பன்

B) முகமது பின் காசிம்

C) அலாவுதீன் கில்ஜி

D) முகம்மது பின் துக்ளக்

4. வடக்கு கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றிய ஆண்டு

A) 1342

B) 1343

C) 1344

D) 1345

5. விஜயநகர அரசு சங்கம வம்ச சகோதரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் __________ நதிக்கரையில் தோற்றுவிக்கப்பட்டது.

A) கிருஷ்ணா

B) துங்கபத்ரா

C) கங்கை

D) யமுனை

6. பாமினி, விஜயநகர அரசுகள் __________ ஆற்றிடைப் பகுதியைக் கட்டுப்படுத்த தங்களுக்குள் கடுமையாக போரிட்டனர்.

A) ஹனோவர்

B) தோ – ஆப்

C) ரெய்ச்சூர்

D) கன்னோசி

7. கிருஷ்ணதேவராயரின் கீழ் இருந்த நாயக்க முறை பற்றிய தகவல்களைத் தரும் இலக்கியம்

A) மனுசரிதம்

B) சாளுவவையுதயம்

C) ராயவாசகமு

D) மதுரா விஜயம்

8. தவறான இணையைத் தேர்ந்தெடு. (அயல்நாட்டுப் பயணிகள் – நாடு)

A) இபன் பதூதா – மொராக்கோ

B) அப்துர் ரசாக் – பாரசீகம்

C) நிகிடின் – ரஷ்யா

D) டோமிங்கோ பயஸ் – இத்தாலி

9. பொருத்துக. (அயல்நாட்டுப் பயணிகள் – காலம்)

1. இபன்பதுதா – i) 1520 – 35

2. அப்துர் ரசாக் – ii) 1470 – 74

3. நிகிடின் – iii) 1443 – 45

4. நூனிஸ் – iv) 1333 – 45

A) i ii iii iv

B) ii i iv iii

C) iv iii ii i

D) iii i ii iv

10. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகர அரசர்கள் வராகன் என்று குறிப்பிடப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர்.

2. இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது.

3. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

11. சுமூகமான நிர்வாகத்திற்காக தில்லி சுல்தானியர் முறையைப் பின்பற்றிய பாமன்ஷா தன் ஆட்சிப் பகுதியை எத்தனை பிரிவுகளாக பிரித்தார்?

A) 2

B) 3

C) 4

D) 5

12. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) பாமன்ஷா ஆட்சியின் நான்கு பிரிவுகள் தராப்ஸ் எனப்பட்டன.

B) பாமன்ஷா ஆட்சியின் பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆளுநர் நியமிக்கப்பட்டு, அவர்கள் அப்பகுதியின் படைகளையும் வழிநடத்தினர்.

C) மாகாண ஆளுநர்கள் மாகாண நிர்வாகம், வரிவசூல் போன்றவற்றிற்கு முழுப்பொறுப்பாவர்.

D) பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி 21 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்.

13. சுதந்திரமான மதுரை சுல்தானியம் உருவான ஆண்டு

A) 1234

B) 1332

C) 1333

D) 1344

14. தான் பெற்ற வெற்றிகளை நினைவு கூரும் வகையில் நாணயங்களில் இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்து கொண்டவர்

A) முதலாம் முகமது

B) ஜாபர்கான்

C) முகமது கவான்

D) ராஜா கிருஷ்ண தேவ்

15. முதலாம் முகமது __________ ஆண்டு வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார்.

A) 1362

B) 1363

C) 1364

D) 1365

16. கூற்று 1: ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும்.

கூற்று 2: நீல வண்ண மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என மனுசரிதம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

17. தவறான இணையைத் தேர்ந்தெடு. (முதலாம் முகமதுவின் அமைச்சர்கள் குழு)

A) வகில் – உஸ் – சுல்தானா : படைத்தலைவர், அரசருக்கு அடுத்தநிலையில் உள்ளவர்.

B) வசீர் – குல்: மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுபவர்

C) அமீர் – இ – ஜும்லா: நிதித்துறை இணையமைச்சர்

D) வசீர் – இ – அஷ்ரப்: வெளியுறவு அமைச்சர்

18. பொருத்துக. (முதலாம் முகமதுவின் அமைச்சர்கள் குழு)

1. நசீர் – i) தலைமை நீதிபதி

2. பேஷ்வா – ii) காவல்துறைத் தலைவர்

3. கொத்வால் – iii) அரசப் படைகளின் பொறுப்பாளர்

4. சதர் – இ – ஜஹான் – iv) நிதித்துறை இணையமைச்சர்

A) i ii iii iv

B) ii i iv iii

C) iv iii ii i

D) ii iii i iv

19. முதலாம் முகமது ____________இல் இரு மசூதிகளை எழுப்பினார்.

A) குல்பர்கா

B) தௌலதாபாத்

C) பீடார்

D) பெரார்

20. கூற்று 1: முதலாம் முகமது வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

கூற்று 2: நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் முகமது ஷா ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அவர் அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

21. பாமினி அரசாட்சியின் போது, ஒரிசா ஆட்சியாளர்கள் __________ ஆண்டு வாரங்கல் மற்றும் அதன் கிழக்கிலிருந்த பகுதிகளை கைப்பற்றினர்.

A) 1365

B) 1375

C) 1413

D) 1425

22. முதலாம் முகமதுவின் ஆட்சிக்கு பின் பாமினி அரசின் தலைநகரம் குல்பர்காவிலிருந்து ____________ ஆண்டு பீடாருக்கு மாற்றப்பட்டது.

A) 1426

B) 1427

C) 1428

D) 1429

23. சிறந்த அரசியல் விவேகியான முகமது கவான் யாருடைய காலத்தில் அமைச்சராக விளங்கினார்?

A) ஜாபர்கான்

B) முதலாம் முகமது

C) இரண்டாம் முகமது

D) மூன்றாம் முகமது

24. முகமது கவான் __________ல் ஒரு பெரிய மதரசாவை நிறுவி அதில் ஒரு பெரிய நூலகத்தை அமைத்தார்.

A) குல்பர்கா

B) தௌலதாபாத்

C) பீடார்

D) பெரார்

25. தவறான கூற்றைத் தேர்ந்தெடு. (முகமது கவான்)

A) முகமது கவான் பீடாரில் நிறுவிய நூலகத்தில் 3000 கையெழுத்து நூல்கள் இருந்தன.

B) கொங்கணம், ஒரிசா, விஜயநகர மன்னர்களுக்கு எதிராக வெற்றிகரமாகப் போரை நடத்தினார்.

C) ஆங்கிலேய வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தை பயன்படுத்தினார்.
D) பாமினி அரசை நிர்வகிக்க வசதியாக நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார்.

26. கூற்று 1: முகமது கவான் அறிமுகப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூன்றாம் முகமது அரசின் நிலையை உயர்த்தின. ஆனால் மாகாணத் தலைவர்களுக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.
கூற்று 2: மாகாணத் தலைவர்களில் பலர் தக்காணத்தை சேர்ந்தவர்களாவர். தக்காணத்தில் அவர்களுக்கிடையே இருபிரிவுகள் உண்டாயின.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

27. கோல்கொண்டா கோட்டையை கட்டிய காகத்திய வம்ச அரசர்
A) ராஜா ரனதேவ்
B) குலிகுதப்ஷா
C) பிரதாபருத்ரன்
D) ராஜா கிருஷ்ண தேவ்

28. கோல்கொண்டா கோட்டை சுல்தான் குலி குதப்ஷாவிற்கு ஜாகீராகத் தரப்பட்ட ஆண்டு
A) 1492 – 1493
B) 1493 – 1494
C) 1494 – 1495
D) 1495 – 1496

29. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தான் __________ ஆவார்.
A) முகமது அலி
B) முகம்மது குலி குதுப்ஷா
C) அகமது குலி குதுப்ஷா
D) அலாவுதீன் குலி குதுப்ஷா

30. _________நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது.
A) 15
B) 16
C) 17
D) 18

31. கூற்று 1: கோல்கொண்டா கோட்டை பெங்களூருவிலிருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
கூற்று 2: கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

32. கோல்கொண்டா கோட்டையின் உயர்ந்த பகுதி_________ என்றழைக்கப்படுகிறது.
A) பதேதர்வாசா
B) தர்பார்வாசா
C) பாலா ஹிசார்
D) பதேதர்ஹிசா

33. கோல்கொண்டா கோட்டையில் ___________ன் கல்லறை உள்ளது.
A) ராஜா கிருஷ்ண தேவ்
B) ஔரங்கசீப்
C) ஷாஜகான்
D) குதுப்ஷாகி

34. ஔரங்கசீப் கோல்கொண்டா கோட்டையை எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு _________ ஆண்டு அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.
A) 1686
B) 1687
C) 1688
D) 1689

35. மூன்றாம் முகம்மது இறந்தபின் பாமினி அரசிலிருந்து பிரிந்த சுதந்திர அரசுகள் எவை?
1. பீஜப்பூர் 2. அகமது நகர் 3. பெரார்
4. கோல்கொண்டா 5. பீடார்
A) அனைத்தும்
B) 1, 2, 5
C) 1, 2, 3, 5
D) 2, 3, 4, 5

36. மூன்றாம் முகம்மது இறந்த பின் பாமினி வம்சத்தை சேர்ந்த _________ மன்னர்கள் ஆட்சி செய்தனர்.
A) 3
B) 4
C) 5
D) 6

37. விஜயநகர அரசுக்கும், பாமினி அரசிலிருந்து உருவான ஐந்து சுதந்திர அரசுகளுக்கும் இடையிலான ராக்சஷி தங்கடி போர் நடைபெற்ற ஆண்டு
A) 1525
B) 1545
C) 1565
D) 1656

38. ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த ஹரிஹரர், புக்கர் ஆகியோர் தங்களை சுதந்திர அரசர்களாக நிலைநிறுத்திக் கொண்டு __________ ஆண்டு புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர்.
A) 1334
B) 1336
C) 1342

D) 1346

39. கூற்று 1: விஜயநகர அரசின் தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது.

கூற்று 2: விரைவில் துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான ஹொசபட்னா என்னும் இடத்திற்கு தலைநகர் மாற்றப்பட்டது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

40. விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான ____________ உருவத்தைத் தங்களது அரச முத்திரையாகக் கொண்டனர்.

A) பசு

B) குதிரை

C) யானை

D) பன்றி (வராகம்)

41. கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் __________ நூற்றாண்டின் இறுதி பகுதியில் வாழ்ந்தவர் ஆவார்.

A) 13

B) 14

C) 15

D) 16

42. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) சங்கம வம்சம்: (1336 – 1485)

B) சாளுவ வம்சம்: (1485 – 1505)

C) துளுவ வம்சம்: (1505 – 1570)

D) ஆரவீடு வம்சம்: (1570 – 1630)

43. பதிமூன்றாம் நூற்றாண்டின் பெரிய அரசுகளான தமிழ்நாட்டில் பாண்டியர், கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாளர், ஆந்திர காகத்தியர் ஆகிய மூன்று அரசுகளும் பதினான்காம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் ____________ படையெடுப்புகளால் அழிவுற்று பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது.

A) விஜயநகர அரசு

B) பாமினி அரசு

C) சோழ அரசு

D) தில்லி சுல்தானியம்

44. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாக குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது.

2. முதலில் கர்நாடகாவில் ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகள் விஜயநகரோடு இணைக்கப்பட்டன. தொடர்ந்து கர்நாடகாவின் கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.

3. பல துறைமுகங்களை சென்றடையும் வாய்ப்பினை இப்பகுதி கொண்டிருந்ததால் இப்பகுதியின் பிரதானிகள் அல்லது அல்லது ஆளுநர்கள் இப்பகுதியின் நிர்வாகத்தில் அக்கறை செலுத்தினர்.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

45. விஜயநகர பேரரசில் ____________ ஆட்சியின் போது தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது.

A) மாரையா நாயக்கர்

B) முதலாம் புக்கர்

C) இரண்டாம் புக்கர்

D) மூன்றாம் புக்கர்

46. இளவரசர் கம்பண்ணாவின் (குமார கம்பண்ணா) நம்பிக்கைக்குரிய தளபதி___________.

A) மாலிக் கபூர்

B) மார்க்கண்டேயன்

C) மாரையா

D) மாணிக்கராயர்

47. குமார கம்பண்ணா ____________ ஆண்டு மதுரை சுல்தானைக் கொன்று மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தார்.

A) 1340

B) 1348

C) 1360

D) 1370

48. குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி எழுதிய 'மதுரா விஜயம்' எனும் நூல் __________மொழியில் எழுதப்பட்டது.

A) தெலுங்கு

B) கன்னடம்

C) சமஸ்கிருதம்

D) தமிழ்

49. __________ நதி விஜயநகர பாமினி அரசுகளை பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.

A) கிருஷ்ணா

B) கோதாவரி

C) மகாநதி

D) தபதி

50. ஆந்திராவின் கடற்கரைப்பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவை சேர்ந்த

__________ அரசுக்கும் விஜயநகருக்குமிடையே நடைபெற்றது.

A) காகத்திய அரசு

B) ஹொய்சாள அரசு

C) சோளங்கிகள் அரசு

D) கஜபதி அரசு

51. கூற்று 1: இரண்டாம் தேவராயர் ஒரியர்களை சில போர்களில் தோற்கடித்தார்.

கூற்று 2: இப்போர்களின் மூலம் ஒரியாவின் பல பகுதிகள் விஜயநகர அரசுடன் இணைக்கப்பட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

52. சங்கம வம்ச அரசர்களுள் மிகச்சிறந்த அரசர் __________.

A) முதலாம் புக்கர்

B) இரண்டாம் புக்கர்

C) முதலாம் தேவராயர்

D) இரண்டாம் தேவராயர்

53. இரண்டாம் தேவராயரின் காலத்தில் விஜயநகருக்கு வருகை தந்த பாரசீக நாட்டின் தூதுவர்

A) நூனிஸ்

B) இபன் பதூதா

C) அப்துர் ரசாக்

D) நிகிடின்

54. இலங்கை அரசனிடமிருந்து கப்பம் பெற்ற விஜயநகர அரசர்

A) கிருஷ்ண தேவராயர்

B) முதலாம் புக்கர்

C) ஹரிஹரர்

D) இரண்டாம் தேவராயர்

55. இரண்டாம் தேவராயரின் இறப்புக்குப் பின்__________ ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் விஜயநகரின் மீது பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன.

A) 1446 – 1450

B) 1450 – 1455

C) 1455 – 1460

D) 1460 – 1465

56. கஜபதியர்களிடமிருந்து விஜயநகரை காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்ட தளபதி சாளுவ நரசிம்மர் ___________ஆண்டு அரசாட்சியை கைப்பற்றினார்.

A) 1483

B) 1484

C) 1485

D) 1486

57. __________ என்ற மாபெரும் போர்வீரர் சாளுவ நரசிம்மரின் தளபதியாக திகழ்ந்தார்.

A) வீரநரசிம்மர்

B) நரச நாயக்

C) நரசிம்மர்

D) நரசிம்மராஜன்

58. சாளுவ நரசிம்மர் ____________ ஆண்டு மரணமடைந்தார்.

A) 1486

B) 1488

C) 1490

D) 1491

59. நரச நாயக்கின் மூத்த மகனான வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்த ஆண்டு

A) 1501

B) 1503

C) 1505

D) 1508

60. மைசூருக்கு அருகே இருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனைத் தோற்கடித்துப் பணியச் செய்தவர்

A) கிருஷ்ண தேவராயர்

B) முதலாம் புக்கர்

C) ஹரிஹரர்

D) இரண்டாம் தேவராயர்

61. கிருஷ்ணதேவராயர் தனது வெற்றித் தூணை நிறுவிய இடம்

A) பீடார்

B) குல்பர்கா

C) சிம்மாச்சலம்

D) விஜயநகர்

62. கூற்று: பாமினி படைகளை முறியடிப்பதற்காகக் கிருஷ்ணதேவராயர் ஒன்றுக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை ஆண்டுதோறும் மேற்கொள்ள நேர்ந்தது.

காரணம்: ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாமினிப் படைகள் விஜயநகரை ஊடுருவின.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

63. கிருஷ்ணதேவராயரிடமிருந்து, போர்ச்சுக்கீசியர்கள் ____________ என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையை பெற்றனர்.

A) கோவா

B) சிம்மாச்சலம்

C) தௌலதாபாத்

D) பத்கல்

64. கீழ்க்கண்ட எந்த இடங்களில் உள்ள சைவ வைணவக் கோயில்களுக்கு கிருஷ்ண தேவராயர் கொடையளித்தார்?
1. ஸ்ரீசைலம் 2. திருப்பதி 3. காளஹஸ்தி
4. காஞ்சிபுரம் 5. திருவண்ணாமலை 6. சிதம்பரம்
A) அனைத்தும்
B) 1, 2, 3, 4
C) 2, 3, 4, 5
D) 1, 2, 3, 6

65. கூற்று 1: விஜயநகருக்கு வருகை தந்த சமகாலத்து வெளிநாட்டுப் பயணிகளான நூனிஸ், பயஸ் போன்றோர் அவருடைய ஆளுமை குறித்தும் விஜயநகரத்தின் உயர் நிலை, செல்வச்செழிப்பு ஆகியன பற்றியும் பாராட்டுகளை விட்டுச் சென்றுள்ளனர்.
கூற்று 2: கிருஷ்ணதேவராயருடைய அரசவையை அல்லசானி பெத்தண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

66. கூற்று 1: கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார்.
கூற்று 2: அச்சுததேவராயர் நாயக் அல்லது நாயங்காரா முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

67. கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரரான ___________ என்பவர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.
A) ராமராஜா
B) அச்சுத தேவராயர்
C) நரச நாயக்கர்
D) செல்லப்பா

68. விஜயநகர பேரரசின் வாரிசுரிமை பிரச்சனையில் கிருஷ்ணதேவராயரின் சகோதரரான அச்சுதராயருக்கு ____________ என்பாரின் ஆதரவு இருந்தது.
A) வீரநரசிம்மர்
B) நரச நாயக்
C) செல்லப்பா
D) நரசிம்மராஜன்

69. அச்சுததேவராயர் மரணமடைந்த ஆண்டு___________.
A) 1539
B) 1540
C) 1541
D) 1542

70. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.
1. சிறந்த வீரரும் ராணுவ வல்லுநருமான ராமராஜர் பாமினி சுல்தான்களை ஒருவரோடு ஒருவர் மோதச் செய்யும் திறமை பெற்றிருந்தார்.
2. போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள் அனுப்பப்படுவதை நிறுத்தினார்.
3. சிலகாலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கைகோத்தார்.
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

71. தலைக்கோட்டை போரில் விஜயநகரம் தோல்வியடைந்த பின் அரசர் சதாசிவராயரும் அவருடைய வீரர்களும் ___________க்கு தப்பிச் சென்றனர்.
A) சந்திரகிரி
B) பெனுகொண்டா
C) மங்களூர்
D) பரகூர்

72. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.
1. தலைக்கோட்டை போருக்கு பின் ராமராஜாவின் சகோதரர் 1570 இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரசமரபான ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.
2. ராமராஜாவின் சகோதரரைத் தொடர்ந்து அவருடைய மகன்களும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இரு தலைமுறை காலத்திற்கு 1620 வரை ஆட்சி புரிந்தனர்.
3. வேறு சில அரசர்கள் நிரந்தரத் தலைநகரமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர்.
A) 1 மட்டும் தவறு
B) 2 மட்டும் தவறு
C) 3 மட்டும் தவறு
D) எதுவுமில்லை

73. கூற்று 1: 1601 இல் விஜயநகர அரசின் விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம நாயக்கர் தலைமையிலும் எதிர்தரப்பினர் வேலூர் நாயக் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேரூரில் கடுமையான போரில் ஈடுபட்டனர்.
கூற்று 2: இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கை ஆதரித்தனர்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

74. பொருத்துக.

1. முதலமைச்சர் – i) மகாபிரதானி
2. தளவாய் – ii) தளபதி
3. வாசல் – iii) அரண்மனைப் பாதுகாவலர்
4. ராயசம் – iv) செயலர்/கணக்கர்
5. அடைப்பம் – v) தனி உதவியாளர்
6. காரிய கர்த்தா – vi) செயல் முகவர்

A) i ii iii iv v vi
B) ii i iii v iv vi
C) i ii iii v iv vi
D) iv ii iii vi i v

75. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு. (விஜயநகரப் பேரரசு)

1. முதலாம் ஹரிஹரரும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து அவற்றில் நிர்வாக அமைப்புகளை உருவாக்க முயன்றனர்.
2. ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யாவுக்கும் ஒரு ராயசம் நியமிக்கப்பட்டார்.
3. ஹொய்சாள, ராஜ்யா, அரகா, பரகூர், மங்களூர், முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும்.

A) 1 மட்டும் தவறு
B) 2 மட்டும் தவறு
C) 3 மட்டும் தவறு
D) 1, 2 தவறு

76. 1400இல் தமிழக பகுதிகளில் விஜயநகரை சேர்ந்த ____________ராஜ்யாக்கள் இருந்தன.

A) 2
B) 3
C) 4
D) 5

77. கூற்று 1: விஜயநகர அரசில் பிரதானி என்பவர் அரசவை உறுப்பினராகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ இருப்பார்.
கூற்று 2: பிரதானி அரச குடும்பத்திற்கு உறவினராக இருப்பார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

78. கீழ்க்கண்டவற்றுள் எது ராஜ்யாவின் (விஜயநகர பேரரசு) நிர்வாகப் பிரிவு அல்ல?

A) சீமை
B) ஸ்தலம்
C) கம்பனா
D) வாசல்

79. நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் ____________ நூற்றாண்டிலிருந்தே இராணுவத் தலைவர், அல்லது இராணுவ வீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

A) 11
B) 12
C) 13
D) 14

80. கூற்று 1: விஜயநகர அரசில் இராணுவ சேவைக்கு பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று.
கூற்று 2: கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக் கட்டணம் எனவும், நாயக்தானம் என மலையாலத்திலும், நாயன் கரமு என தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

81. நாயக்க முறை யாருடைய ஆட்சியின் போது நிறுவன வடிவம் பெற்றது?

1. ஹரிஹரர் 2. இரண்டாம் தேவராயர்
3. கிருஷ்ணதேவராயர் 4. அச்சுதேவராயர்

A) 1, 2
B) 2, 3
C) 1, 4
D) 3, 4

82. விஜயநகர அரசு ____________க்கும் மேற்பட்ட நாயக்குகளாக பிரிக்கப்பட்டிருந்ததாக நூனிஸ் குறிப்பிட்டுள்ளார்.

A) 200
B) 250
C) 300
D) 400

83. விஜயநகர பேரரசின் நாயக்க முறை பற்றிய நூனிஸின் கூற்றை ____________ என்னும் நூல் உறுதிபடுத்துகிறது.

A) மதுரா விஜயம்
B) ஆமுக்த மால்யதா
C) ராயவாசகமு
D) மனுசரித்ரா

84. கூற்று 1: நாயக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமயங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட வருவாயை வழங்க வேண்டும்.
கூற்று 2: கிருஷ்ணதேவராயரிடம் பணிபுரிந்த செல்லப்பா போன்ற மிகச்சிறந்த நாயக்குகள் பிராமணர்கள் ஆவர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

85. _________ நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.
A) 15
B) 16
C) 17
D) 18

86. கூற்று 1: பாமினி அரசவைகளில் நடைபெற்ற மோதல்களுக்குத் தக்காணப் பகுதிகளில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர் ஆகியோர் குடியேறியதே காரணமாயிற்று.
கூற்று 2: விஜயநகரப் பகுதிகளைப் பொறுத்த அளவில் கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களும் அவர்களைச் சேர்ந்தோரும் தமிழகப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் குடியேறினர்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

87. கூற்று: 1430இல் தமிழ்நாட்டின் மையப்பகுதிகளில் ஒரு கிளர்ச்சி நடைபெற்றது
காரணம்: அரசு பிரதானி (ஆளுநர்) அவருடைய படைவீரர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் உட்பட நியாயத்திற்குப் புறம்பாக அதிக வரி கட்டும்படி மக்களை வற்புறுத்தியதன் காரணமாக இக்கிளர்ச்சி ஏற்பட்டது.
A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு
B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

88. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
1. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வப்போது வரிச்சலுகை வழங்கினர்.
2. விஜயநகர அரசின் காலத்தில் வேளாண் சாராத கைவினைத்தொழில் உற்பத்தி வியத்தகு வளர்ச்சியை அடைந்தது.
3. வேளாண் அல்லாத பிரிவுகளை சார்ந்த பட்டடை அல்லது காஸய வர்க்கம் என்றழைக்கப்பட்டவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர்.
4. தமிழகத்தின் வட பகுதி, ராயலசீமை, ஆந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிக மையங்களும் நெசவு மையங்களும் உருவாயின.
A) 1, 2 தவறு
B) 3 மட்டும் தவறு
C) 2, 4 தவறு
D) எதுவுமில்லை

89. எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது
A) சோழ மற்றும் விஜயநகர அரசுகள்
B) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்
C) சேர மற்றும் பாண்டிய அரசுகள்
D) சோழ மற்றும் சேர அரசுகள்

90. இராமநாதபுரம் சிற்றரசு மதுரை நாயக்க அரசர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரால் _________நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் துவக்கிவைக்கப்பட்டது.
A) 15
B) 16
C) 17
D) 18

91. இராமேஸ்வரம் கோயில் ___________ என்பவரின் பாதுகாப்பின் கீழிருந்தது.
A) நாயக்கர்கள்
B) அறங்காவலர்கள்
C) உடையான் சேதுபதி
D) பாண்டியர்கள்

92. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.
1. இராமநாதபுரம் பகுதி வாழ் மக்களைப் போலவே புதுக்கோட்டை பகுதி வாழ் மக்களும் போர்புரியும் மரபை சார்ந்தவர்களாவர்.
2. இதன் காரணமாகவே தொண்டைமான்களின் தலைமையில் புதுக்கோட்டை ஒரு சிற்றரசு என்னும் மதிப்பை பெற்றது.
3. இத்தொண்டைமான்கள் சேதுபதி, மதுரை, தஞ்சை நாயக்க அரசர்களின் அரண்மனைகளில் முக்கிய பணிகளில் பணியாற்றினர்.
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 4 சரி